1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குத்தான் இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. அதுவும் வட ஆர்க்காடு மாவட்டம் என்று முடிவாகிவிட்டது. எனவே, அதனை மாற்றுவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு கல்வராயன் மலையில் ஏராளமான சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன. ஆகவே, அங்கே சந்தனச் சோப்பு தொழிற்சாலை ஏற்படுத்தாவிட்டாலும் சந்தனத் தைலம், ஊதுவத்தி போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையாவது அமைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே அங்கே இருக்கக்கூடிய சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தகவலுக்கு இந்த அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சந்தனக்கட்டை அனுப்பப்படுகிறது. குறிப்பாக தனிப்பட்ட வியாபாரிகள் எல்லாம் வாங்குகிறார்கள். அதிகபட்சம் கர்நாடக மாநிலத்திலே அரசின் மூலமாகவும் வாங்கப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, சந்தன மரத்தைக் கொண்டு செய்யப்படும் அழகு சிலைகளுக்கும் மாலைகளுக்கும் வெளிநாடுகளிலே நல்ல தேவை இருப்பதால் அந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அந்தத் தொழில் ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டு தான் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்கொடை வசூலித்தல்.

*644 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகள், மாணவர்களிடம் எந்த உருவத்திலும் நன்கொடை வசூலிக்கத் தடை செய்யும் வகையில் கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

[1978 மார்ச் 21

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, இது வரையில் எந்தெந்த கல்லூரிகள் அத்தகைய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே, கல்லூரி மாணவர்களிடத்திலே நன்கொடை வசூலிக்கின்ற கல்லூரியின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நாம் வலியுறுத்திக் கூறியதற்கு பின்னுல் சென்னையிலே தியாகராஜர் கல்லூரியிலே அப்படி வசூலிக்கப்படுகிறது என்கின்ற புகார் வந்தது. ஆனுல் விசாரித்ததில் போதுமான ஆதாரங்கள் இல்லையெனத் தெரிய வருகிறது. இருந்தாலும் அதை நடைமுறைப் படுத்துவதிலே அரசு கண்டிப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, தனியார் கல்லூரி ஆசிரியர்கள், அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு, இப்போது உயர்நிலைப்பள்ளிகளில் புதிதாக ஹையர் செகண்டரி எஜுகேஷன் பாடமுறை ஆரம்பிக்கப் படுவதால், பாதிப்பு அதாவது பணிகள் இழப்பு ஏற்படாது என்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் உறுதி கூறியிருக்கிருர்கள் என்று கூறப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, கல்லூரிகளிலே நன்கொடை வாங்குகின்ற இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயது செய்து உறுப்பினர்கள் மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகள் கேளுங்கள்.

திரு, எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, பல கல்லூரிகளில் பணம் படைத்தவர்கள் பணம் கொடுப்பதும் அந்த நிர்வாகத்தினர் பணம் வாங்குவதும் இப்படித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அரசு நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் நேரத்திலேயும் வசூலிக்கிருர்கள். ஆகவே இப்போது அந்தக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அரசே சம்பளம் கொடுக்கின்ற வகையிலே இருப்பது போல் அந்தக் கல்லூரி மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் அரசே மேற்கொள்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, மாணவர்களைக் கல்லூரியிலே சேர்ப்பதற்கு விதிமுறைகளை உருவாக்க முடியுமா என்பதை அரசு ஆலோசித்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 21]

[முற்பகல் 9-20]

திரு. ரா. உமாநாத்: கட்டாயமாக வசூல் செய்வதாக புகார் வந்து விசாரித்தபோது ஆதாரம் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆதாரம் இல்லை என்பதல்ல உண்மை. கொடுக்கிறார்கள், உண்மையில் வசூல் செய்யவும் செய்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி விசாரிக்கப்போகிறபோது பெற்றோர்கள் சொல்லப் பயப்படுகிறார்கள். அந்த மாணவர்களை வேறுவகையில் பெயில் பண்ணிவிடுவார்களோ என்று அந்த பயத்தின் கான்டெக்ஸ்டில்தான் ஆதாரம் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே ஆதாரங்களைப் பெற வழிவகை செய்ய யோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அத்தகைய தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிற கல்லூரிகளின் மீது நடவடிக்கை எடுக்க அரசு நிச்சயமாக உறுதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைத் தவிர்ப்பதற்காகத்தான் மாணவர்களைச் சேர்க்கிற முறையில் ஏதாவது விதிமுறைகளைப் புகுத்தமுடியுமா என்பதுபற்றி இப்போது ஆராய்ந்து வருகிறோம். ஆதாரம் இல்லாமல் நாம் நடவடிக்கை எடுப்பது என்பது அவ்வளவு உசிதமாகாது என்பதால்தான் அதிலே நாம் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டியதாக இருக்கிறது.

திரு. போ. கோபாலன்: கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க நன்கொடை வசூலிப்பதை தடை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தாலும் கல்லூரிகளில் சில நல்ல காரியங்களை நிறைவேற்ற வசூல் செய்வது தேவைப்படும். அந்நிதியை மாணவர்கள் அன்பளிப்பாக அல்லது நன்கொடையாக அளிப்பதை பெற கல்லூரி நிறுவனங்களுக்கு உரிமைகள் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தத் தனியார் கல்லூரிகளின் நிர்வாகக் கூட்டு மாநாட்டில் நான் பேசுகிற போது இதைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் மாணவர்களைச் சேர்க்கின்ற போது என்ன நன்கொடை வாங்கினாலும் அது இடத்திற்காகப் பெறப்படுகிற விலையாகத்தான் மக்கள் கருதுவார்கள், நாங்களும் கருதுகிறோம் என்று அவர்களுக்கு உறுதியாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: சென்னையில் இருக்கிற எஸ். ஐ. இ. டி. கல்லூரி அரசாங்க மானியம் தேவையில்லை என்றும், அவர்கள் நன்கொடை வசூல் பண்ணியே நாங்கள் கல்லூரியை நடத்துகிறோம் என்று அரசாங்கத்திற்கு சவால் விடுகிற நிலை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன், அது உண்மையா? அதேமாதிரி நாகர்கோவிலில் உள்ள பயோனியர் குமாரசாமி கல்லூரியில் ஏற்கனவே எம். எஸ்.-ன் இன்னிசைக் கச்சேரி வைத்து பல லட்சக்கணக்கான

ரூபாய் மோசடி செய்திருப்பதாக பல புகார்கள் வந்திருக்கின்றன, போட்டோஸ்டெட் காப்பியும் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எஸ். ஐ. இ. டி. கல்லூரியில் அவர்கள் சம்பளமே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், என்று தகவல் இருக்கிறது. ஆகவே நாம் மானியத்தை நிறுத்தி விடுகிற நிலையில் இப்படி அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். பயோனியர் குமாரசாமி கல்லூரி பற்றி பல்வேறு பிரச்சினைகள் விசாரணையில் இருந்து வருகிறது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : சமீபத்தில் ''ஸ்டார் நைட்'' போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆரம்பப் பள்ளி மாணவர்களாகிய சிறுவர்களிடமிருந்து கூட வசூல் செய்வதாக தகவல் இருக்கிறது. அது உண்மையா? அப்படி சின்னஞ்சிறு சிறார்களிடமிருந்து வசூல் செய்கிற காரியத்தை இனிமேலாவது நிறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி தகவல் இல்லை.

வள்ளியூர் உயர்நிலைப் பள்ளி.

* 645 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நெல்லை மாவட்டம் நெல்லை தெற்கு பகுதிக்கு உட்பட்ட வள்ளியூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவிகள் சேர்க்கப்படாததற்கு காரணம் என்ன?

(ஆ) இந்தச் சலுகை வள்ளியூரிலுள்ள இதர தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு மேற்கண்ட அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மட்டுமே மறுக்கப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) பெண்களுக்கென தனியாக பள்ளிகள் இயங்கும் இடங்களில், ஆண்கள் பள்ளிகளில் பெண்களைச் சேர்ப்பது பொதுவாக தவிர்க்க வேண்டுமென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது தான் இதற்குக் காரணமாகும்.

(ஆ) இல்லை. வள்ளியூரிலுள்ள கலைகார்டியா உயர்நிலைப் பள்ளியில் மாணவிகள் சேர்க்கக்கூடாதென பிறப்பிக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் ஆணையை எதிர்த்து பள்ளி நிர்வாகம்